**இலங்கை மஹாவலி அதிகாரசபை மற்றும் அதன் துணைக்கம்பனிகள – 2016**

---

இலங்கை மஹாவலி அதிகாரசபையினதும் அதன் துணைக்கம்பனிகளினதும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

### 2.1.1 தொகுதி

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை மஹாவலி அதிகாரசபையினதும் அதன் துணைக்கம்பனிகளினதும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.2 அதிகாரசபை

இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை மஹாவலி அதிகாரசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - தொகுதி

### 2.2.1 திரட்டிய நிதிக்கூற்றுக்கள்

அதிகாரசபையின் பூரண உரித்துடன் கூடிய அதன் 03 துணைக்கம்பனிகளும் ஒன்றிணைக்கப்பட்டு திரட்டிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் ஒரு கம்பனியின் கலைப்பு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதில் கடன்கொடுத்தோரின் கணக்கு தீர்ப்பனவு மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் மஹாவலி வென்ஷர் கெப்பிடல் (தனி) கம்பனி ரூபா 15,510,548 ஆன சொததுக்கள் மற்றும் ரூபா 406,708 ஆன பொறுப்புக்கள் திரட்டிய நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நியமத்தின் 17 ஆம் அத்தியாயத்தின் 17.19 ஆம் பிரிவின் பிரகாரம் மஹாவலி மதியுரை சேவைகள் பணியகம் (தனியார்) கம்பனியின் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 3,519,602 தொகையான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மஹாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய முயற்சிகள் (தனியார்) கம்பனியால் நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.8 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி தொடர்ந்தியங்குதல் தொடர்பாகவும் 33 ஆம் அத்தியாயத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியுடன் தொடர்புடைய தரப்பினர் தொடர்பாகவும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பனியால் நியமத்தின் 4 ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் ஆறு மாதங்களில் முதிர்ச்சியடையும் ரூபா 6,926,566 ஆன நிலையான வைப்புக்கள் நடைமுறைச் சொத்துக்களாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் நடைமுறையல்லாத சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மஹாவலி மதியுரை சேவைகள் பணியகம் (தனியார்) கம்பனி பெறுமதி சேர் வரியில்லாமல் வெளிநாட்டு விசேட நிபுணர்களுக்கு மார்ச் மாதத்திலிருந்து மதியுரைக் கட்டணங்களாக ரூபா 4,135,400 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் உள்ளடக்கப்படாத ரூபா 539,400 ஆன பெறுமதி சேர் வரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய வரியிலிருந்து ஈடுசெய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களில் மதியுரைக் கட்டணச் செலவினம் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மஹாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய வர்த்தக (தனியார்) கம்பனி

(i) இலங்கை மஹாவலி அதிகாரசபைக்கு விடுவிக்கப்பட்டிருந்த முகாமைத்துவ உதவியாளர் ஒருவருக்காக 2010 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை கம்பனியின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட ரூபா 1,242,000 ஆன சம்பளத்தை அதிகார சபையிலிருந்து பெற வேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இனங்காணப்படாத அனைத்து பண்ணைக் கடன்பட்டோர் மீதிகளின் பெறுமதி ரூபா 35,682,485 தொகை தொங்கல் கணக்கொன்றில் உள்ளடக்கப்பட்டு நிதிக்கூற்றுக்கள் சமப்படுத்தப்பட்டிருந்தன.

(இ) இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பனி

(i) முகப்பு பெறுமதி பூச்சியமான ரூபா 865,700 கிரயப் பெறுமதியான கணனி மற்றும் கணனி உபகரணங்கள் மீளாய்வாண்டின் போது விற்பன செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றின் கிரயம் திரண்ட பெறுமானத்தேய்வு என்பன உரிய கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) அரச வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொண்டிருந்த ரூபா 600,000 ஆன கடன்தொகை 2016 சனவரி 11 ஆந் திகதி வட்டியுடன் முழுத்தொகையும் தீர்க்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய ரூபா 14,748 ஆன கடன் வட்டி மேலும் செலுத்த வேண்டியதாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மஹாவலி மதியுரை சேவைகள் பணியக (தனியார்) கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இரண்டு குத்தகை கம்பனிகளின் கடன்கொடுத்தோர் பெறுமதி முறையே ரூபா 4,732,952 மற்றும் ரூபா 1,000,448 ஆக இருந்த போதிலும், மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் அவை முறையே ரூபா 4,850,729 மற்றும் ரூபா 892,285 ஆக இருந்தன.

(ஆ) மஹாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய வர்த்தக (தனியார்) கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 88,183,837 ஆக இருந்த போதிலும், பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 88,094,019 ஆக இருந்தமையால் ரூபா 89,818 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் கணக்கு விடயங்கள் தொடர்பாக அவற்றிற்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) மஹாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய முயற்சிகள் (தனியார்) கம்பனி

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| மஹாவலி பொருளாதார முகவர் | 405,218,731 | |
| கொத்மலை பால் சங்கம் | 2,900,000 | மூலதன மானியமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ள இப்பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கும் கணக்கீடு செய்வதற்குமான ஆவணங்கள் |
| ஐரோப்பா பொருளாதார ஆணைக்குழுவின் மூலதன மானியம் | 3,583,706 | |
| வெளிநாட்டு உதவி | 5,729,782 | |
| நிலையான சொத்துக்கள் பதிவழிப்பு | 859,256 | பெறுமதி உருவான முறை மற்றும் உரிய அங்கீகாரம் |
| பெறவேண்டிய கணக்குகள் - மஹாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய வர்த்தக (தனி) கம்பனி | 1,382,468 | மீதி உறுதிப்படுத்தல்கள் |

(ஆ) **இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பனி**

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| பெறவேண்டிய கணக்குகள் | 391,154 | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| செலுத்த வேண்டிய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி | 109,498 | வரி கணிப்பீட்டு அட்டவணைகள் |
| கற்பனைச் சொத்துக்கள் | 29.500 | பெறுமதி உறுதிப்படுத்துவதற்குரிய எழுத்துமூல சான்றுகள் |

## 2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - அதிகாரசபை

### 2.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் நியாயமான பெறுமதி கருத்திற் கொள்ளக்கூடியளவு மாற்றமடையக்கூடிய மற்றும் துரிதமான மாற்றங்களுடன்கூடிய சொத்துக்கள், மீள் மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் 1984 - 1989 காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 67,440,853 கிரயமான 03 காணிகளின் நியாயமான பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 கணக்கீட்டுக் கொள்கை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மஹாவலி அதிகாரசபையினால் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களையும் அன் துணைக் கம்பனிகள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களையும் பின்பற்றியிருந்த போதிலும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 124,570,000 பெறுமதியான விவசாய மற்றும் கால்நடை வளங்கள் இருப்பின் பெறுமதியை தீர்மானிப்பதற்கு பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விக்டோரியா வலயத்தில் 7,588 நூலகப் புத்தகங்கள் காணப்பட்ட போதிலும் அதனைச் சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அவ்வலயம் கொள்வனவு செய்திருந்த ரூபா 985,960 ஆன நூலகப் புத்தகங்கள் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது சிறிய நீர் மின்வலு நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்திற்காக மின்சார சபையிடமிருந்து கிடைக்கவேண்டிய ரூபா 7,700,890 பெறவேண்டிய வருமானமாகக் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்காக கிடைத்த ரூபா 3,912,069 தொகை மீளாய்வாண்டின் வருமானமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) கணக்காய்வின் கணிப்பீட்டின் பிரகாரம் 06 வலயங்கள் மற்றும் பண்ணையொன்றின் நிலையான சொத்துக்கள் பெறுமானத்தேய்வு என்பன ரூபா 4,003,885 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டத்திலிருந்து அதிகாரசபைக்கு 2016 செப்தெம்பர் 27 ஆந் திகதி கையளிக்கப்பட்ட ரூபா 671,503,748 தொகையான நிலையான சொத்துக்களின் பெறுமதியை கணக்கிலிடுவதற்கும் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மணலாறு வலயத்தினால் 2015 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 363,025 தொகையான மாடுகளின் பாரம் கணக்கிடும் தராசு அவ்வாண்டின் செலவினமாக பதவிழிக்கப்பட்டமையால் நடைமுறையல்லாத சொத்துக்கள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) ஹுருலுவெவ வலயத்தின் மக்களுக்கு வழங்குவதற்காக 2016 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 247,800 பெறுமதி 07 சோஜ் தயாரிக்கும் இயந்திரங்கள் இருப்பாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன

(எ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு வலயங்களில் காணப்பட்ட பல்வேறு வகையான 59,484 நாற்றுக்களின் கூட்டிய பெறுமதி மற்றும் ஒரு வலயத்திற்குரிய ரூபா 352,620 பெறுமதியான 8,765 நாற்று வகைகள் இறுதி இருப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2016 ஆம் ஆண்டின் போது விக்டோரியா வலயத்திற்கு கையேற்கப்பட்ட வோட்டர் பீல்ட் நிறுவனத்தின் கட்டிடங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) "பீ" வலயத்தினால் அரலகன்வில விதை பண்ணையின் ஆட்டுத் தொழுவம் மற்றும் மஹாவலிதன்ன பிரிவில் நெல் களஞ்சியமொன்றை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 3,027,198 ஆன மூலதனத் தன்மையிலான செலவினம் மீண்டெழும் செலவினமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 20,960,226 ஆன நிலுவை ஆதன வரி வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) சிறிய அளவிலான 3 நீர் மின் நிலையங்களை நிர்மாணிப்பதற்காக முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த காணிகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 19,299,125 ஆன குத்தகை வாடகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

அதிகாரசபையின் வலயங்களுக்கு இடையே சொத்துக்கள் பரிமாற்றத்தின் போது உரிய வலயங்களில் நிலையான சொத்துக்கள் பெறுவனவு மற்றும் வழங்கல் கணக்குகளை ஒன்றிணைக்கும் போது சமப்படுத்தப்பட வேண்டிய போதிலும் வலயங்களிலிருந்து கிடைத்த ரூபா 136,709,000 பெறுமதியான சொத்துக்கள் மற்றும் வலயங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட ரூபா 128,730,000 பெறுமதியான சொத்துக்கள் தொடர்பாக கணக்குகளை ஒன்றிணைக்கும் போது ரூபா 7,979,000 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.3.5 தொங்கல் கணக்குகள்

அதிகாரசபைக்குரிய துணைக் கம்பனியொன்றின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 35,682,485 ஆன தொங்கல் கணக்கு இனங்கண்டு தீர்வுசெய்யப்படாமல் திரட்டிய நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கடன்பட்டோராக காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்கள் தொடர்பாக அவற்றிற்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) மஹாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய முயற்சிகள் (தனியார்) கம்பனி

| கணக்கு விடயம் | | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| முதலீடு | - மஹாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய முயற்சிகள் (தனி) கம்பனி | 10,000,000 | முதலீட்டுச் சான்றிதழ் |
| | - மஹாவலி வென்ச்சர் கெப்பிடல் (தனியார்) கம்பனி | 9,800,000 | |
| | - மஹாவலி மதியுரை பணியகம் (தனி) கம்பனி | 64,000 | |
| | - இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனி) கம்பனி | 15,000 | |
| | - மஹாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய முயற்சிகள் (தனி) கம்பனி | 10,000,000 | |
| | - | | |
| சேமிப்புக் கணக்கு | | 2,632,908 | (i) மீதி உறுதிப்படுத்தல்<br>(ii) வங்கி பாஸ் புத்தகம் |
| நிலையான வைப்புக்கள் | | 727,481 | (i) மீதி உறுதிப்படுத்தல்<br>(ii) வைப்புச் சான்றதழ் |

## 2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட பெறவேண்டிய வாடகை வருமானமான ரூபா 662,953,920 தொகையில் 05 வருடங்களை மிகைத்த ரூபா 140,623,878 தொகையும் 03 ஆண்டுகள் முதல் 05 ஆண்டுகளுக்குரிய ரூபா 35,119,000 ஆக இருந்தது. அதிகாரசபைக்குச் சொந்தமான காணியை குத்தகைக்கு வழங்கியதில் வருமான சேகரிப்பிற்குரித்தாக விதிக்கப்பட்டிருந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகள் முறைப்படி செயற்படுத்தப்படாமை இவ்வாறு நிலுவை வாடகை வருமான மீதி அதிகரிப்பதற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

(ஆ) அதிகாரசபைக்குரிய கட்டிடங்களை வெளித்தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கும் போது உரிய மின்சாரம், நீர் மற்றும் சுத்திகரிப்புச் செலவினங்கள் என்பவற்றை மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதிகாரசபையால் செலவிடப்பட்ட ரூபா 3,228,320 ஆன செலவினம் 06 வெளித்தரப்பினரிடமிருந்து மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தவேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 330,231,855 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 12,082,658 தொகை 05 ஆண்டுகளை கடந்திருந்தன. அம்மீதிகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 5,053,925 ஆன நிறுத்தி வைத்தல் பணத்திற்குரிய ஒப்பந்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதை உறுதிப்படுத்தி நிறுத்தி வைத்தல் பணத்தை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2010 ஆம் ஆண்டின் போது அதிகாரசபைக்கு சொந்தமான கலங்குட்டிய பண்ணையில் 25 ஏக்கர் வேறொரு அமைச்சிற்குரிய கால்நடை வளங்கள் கம்பனிக்கு முறையாக குத்தகைக்கு வழங்கப்படாமல் இருந்ததுடன் 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை அறவிடப்பட வேண்டிய குத்தகைத் தொகை ரூபா 5,985,000 ஆக இருந்தது.

(உ) விக்டோரியா – கொத்மலை வலயத்தின் வீடுகளுக்காக அறவிடப்பட வேண்டிய குத்தகை வருமானத்தில் ரூபா 8,847,821 மஹாவலி ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த சினிமா கொட்டகையுடன் கூடிய காணியிலிருந்து 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 1,507,427 ஆன வாடகை அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. இந்நிலுவை வாடகையை அறவிடுவதற்காக வழக்கு தொடரப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மாதுரு ஓயா 1 மின் நிலையத்தின் மீற்றரில் தவறொன்று காரணமாக 2015 திசெம்பர் 12 ஆந் திகதி முதல் 2016 சனவரி 06 வரையான காலத்திற்கு குறைவாக கணக்கிடப்பட்டிருந்த கிலோவொட் அளவிற்காக ரூபா 4,128,992 தொகை மின்சார சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது.

(எ) மஹாவலி மதியுரை சேவை பணியக (தனி) கம்பனியின் மீளாய்வாண்டின் இறுதியில் 03 ஆண்டுகள் கடந்திருந்த ரூபா 1,852,118 தொகையான பெற வேண்டிய கணக்கு மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2010 ஆம் ஆண்டின் போது நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் அபிவிருத்தி அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்த மஹாவலி கால்நடை வளங்கள் மற்றும் வர்த்தக கம்பனியின் நீராவிய பண்ணையின் கால்நடை வளங்கள் இருப்பிற்காக அந்த அமைச்சிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 5,820,430 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் 05 ஆண்டு காலம் கடந்திருந்த ரூபா 690,784 ஆன கடன்கொடுத்தோர் மீதிகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) “பீ” வலயத்தின் காணிகளிலிருந்து 2015 மே முதல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பெற்றுக்கொண்ட 75,941 கியுப் மணலுக்காக கிடைக்க வேண்டிய காணி பயன்பாட்டுக் கட்டணமான ரூபா 37,970,500 தொகை தொழில்நுட்ப சேவைகள் தனியார் கம்பனியிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1979 இன் 23 ஆம் இலக்க இலங்கை மஹாவலி அதிகாரசபை சட்டம் | |
| (i) 39(1) ஆம் பிரிவு | துணைக் கம்பனிகளின் பணிப்பாளர் சபை அரசின் பணிப்பாளர்கள் மற்றும் 07 பங்குதாரர்களின பணிப்பாளர்களைக் கொண்டிருக்க வேண்டிய போதிலும் அக்கம்பனியின் பணிப்பாளர் சபை மூன்று பேரை மாத்திரம் கொண்டிருந்தன. |
| (ii) 42(1) ஆம் பிரிவு | துணைக் கம்பனிகளின் பங்கு மூலதனம் ரூபா 100 ஆன சாதாரண பங்குகளைக் கொண்டிருக்க வேண்டிய போதிலும் இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனி) கம்பனியின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூபா 10 ஆன 10,000,000 சாதாரண பங்குகளையும் மஹாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய வர்த்தக (தனியார்) கம்பனியின் மூலதனம் ரூபா 10 ஆன 5,000,000 சாதாரண பங்குகளைக் கொண்டிருந்தன. |
| (iii) 45(1) ஆம் பிரிவு | கம்பனிகளில் பணிப்பாளர் சபையால் அப்பணிப்பாளர்களுக்கு இடையே பணிப்பாளரொருவர் கம்பனியின் தலைவராக தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும் இரண்டு கம்பனிகளில் வரிசை அமைச்சர் மற்றும் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் பணிப்பாளர் ஒருவர் தலைவராக நியமிக்கப்பட்டிருந்ததுடன் ஒரு கம்பனியில் 2015 செப்தெம்பர் முதல் தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். |
| (ஆ) 2013 இன் 17 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் திருத்திய 10 (ஆ) ஆம் பிரிவு | மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டின் போதும் 12 மாத கால எல்லைக்காக பொருட்கள் மற்றும் சேவை வழங்கல்களின் மொத்தப் பெறுமதி ரூபா 12 மில்லியனை விஞ்சுமாயின் பெறுமதிசேர் வரிக்காக பதிவு செய்ய வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் குறித்த வருமான மூலகங்களிலிருந்து முன்னைய ஆண்டின் போது ரூபா 18 மில்லியன் மற்றும் மீளாய்வாண்டின் போது ரூபா 87 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும் பெறுமதிசேர் வரிக்காக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 104(4) | வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்த இரண்டு வாகனங்கள் விபத்திற்கு உட்பட்டிருந்த போதிலும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் நட்டத்தை மதிப்பீடு செய்து பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 756 | ஹுருலுவெவ வலயத்தில் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட சொத்துக்கள் கணிப்பீட்டின் போது இனங்காணப்பட்ட 292 மிகைகள் மற்றும் 50 பற்றாக்குறைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2016 சனவரி 01 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ திணைக்களத்தின் சுற்றறிக்கை | சுற்றறிக்கை பிரகாரம் இலங்கை மஹாவலி அதிகாரசபையால் வாகனங்கள் தொடர்பாக கணனி மயப்படுத்தப்பட்ட தகவல் முறையொன்று பேணப்படாதிருந்தமையால் அதிகாரசபைக்கு சொந்தமான வாகனங்களின் எண்ணிக்கை, அவ்வாகனங்களின் பதிவு உரித்து, வாகனங்கள் இணைக்கப்பட்டுள்ள பிரிவுகள் மற்றும் அதன் சாரதிகள் போன்ற விபரங்கள் உட்பட அதிகாரசபைக்கு உரித்தான வாகனங்கள் எந்தளவு காணப்படுகின்றன தொடர்பாக சரியான தகவலொன்றை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. |
| (உ) அதிகாரசபையின் நிதி செயற் பணிக்கோவையின் 1.5.1 ஆம் பிரிவு மற்றும் 2012 மார்ச் 15 ஆந் திகதிய 02/2012 ஆம் இலக்க பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவு | (i) முற்பணம் பெறப்பட்ட பணி முடிவடைந்து 07 நாட்களுக்குள் முற்பணம் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், ‘‘எல்’’ வலயத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ஒரு வருடத்தை விஞ்சிய தீர்க்கப்படாத முற்பணங்களின் பெறுமதி ரூபா 11,881,612 ஆக இருந்தது.<br><br>(ii) பெற்றுக்கொண்ட முற்பணத்தை தீர்வு செய்யாமல் மீண்டும் முற்பணத்தை பெற்றுக்கொள்ள முடியாத போதிலும் அதற்கு முரணாக 6 வலயங்களினால் 61 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,137,401 எரிபொருள் மற்றும் கொள்வனவு முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. அம்முற்பணம் ஆண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய 57 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2015 மார்ச் 31 ஆந் திகதிய 2/2015 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் 08 ஆம் பந்தி | மஹாவலி மதியுரை சேவைகள் பணியகம் (தனி) கம்பனியால் மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் சபை அங்கீகாரமின்றி நன்கொடைகளுக்காக ரூபா 539,000 செலவிடப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது தொகுதியினதும் அதிகாரசபையினதும் நிதி விளைவுகள் முறையே 34,602,000 மற்றும் ரூபா 37,853,000 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை முறையே ரூபா 271,246,000 மற்றும் ரூபா 273,450,000 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் முறையே ரூபா 236,644,000 தொகை மற்றும் ரூபா 235,597,000 பற்றாக்குறையில் குறைவொன்றைக் காட்டியது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்தபோது 2012 ஆம் ஆண்டில் ரூபா 350,271,000 ஆகக் காணப்பட்ட பற்றாக்குறை தளம்பலடைந்து 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 37,853,000 ஆக இருந்தது. நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமனத்தேய்வு மற்றும் வரி என்பவற்றைக் மீளச் சீராக்கம் செய்த போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 1,876,561,000 ஆகக் காணப்பட்ட அதிகாரசபையின் பங்களிப்பு 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக அதிகரித்து 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 3,081,393,000 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 2,520,568,000 ஆக குறைவடைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது பண்ணை உற்பத்தி விற்பனைகளிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 81,911,000 ஆல் அதிகரித்திருந்தது. மொரகஹகந்த செயற்திட்டத்திற்குரிய நீராவிய பண்ணையை மீளாய்வாண்டின் போது அதிகாரசபைக்கு கையளித்தமை இதற்கு காரணமாக இருந்தது.

(ஆ) மக்கள் கிராமங்களை புனரமைப்புச் செய்தல், மேம்படுத்துதல் மற்றும் பராமரிப்பு செலவினம் 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் ரூபா 763,401,000 ஆல் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் ‘‘பீ’’ வலயத்தின் ஒன்றினைந்த அபிவிருத்தி செயற்திட்டத்தை செயற்படுத்தியமை இதற்கு காரணமாக இருந்தது.

### 3.3 அதிகாரசபைக்கு எதிராக அல்லது அதிகாரசபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

தலைமை அலுவலகம், 07 வலயங்கள், இரண்டு பிரிவுகள் மற்றும் செயற்திட்டம் ஒன்றினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் வெளி நிறுவனங்களாலும், நபர்களினாலும் வீடுகளின் உரித்தை மீள பெற்றுக் கொள்வதற்காக அதிகாரசபைக்கு எதிராக 161 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. அதன் நிதி பொறுப்பு ரூபா 8.491 மில்லியனாக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 25.395 மில்லியன் எனக் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் அதிகாரசபையினால் வீடுகள் மற்றும் காணி உரித்தை பெற்றுக்கொள்ளல் ஏனைய காரணங்கள் அடிப்படையில் ரூபா 10,230,554 ஆன இழப்பீடு கோரிய வெளிநிறுவனங்களுக்கும் நபர்களுக்கும் எதிராக நீதிமன்றங்களில் 60 வழங்குகள் தொடரப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பாரிய மஹாவலித் திட்டம்**

பாரிய மஹாவலி திட்டத்தின் பிரகாரம் மஹாவலி கங்கையின் 6,900 மில்லியன் கன மீற்றர் அளவிலான நீர் மின்சார உற்பத்திக்கும் 13 மஹாவலி வலயங்களில் 365,853 ஹெக்டேயர் காணிகளுக்கு நீர்ப்பாசன வசதிகளை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் 85,252 ஹெக்டேயர் காணிக்கு மாத்திரம் நீர் வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் மின் உற்பத்திக்காக பயன்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட 11 நீர்த்தேக்கங்களில் 06 நீர்த்தேக்கங்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டு நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.

1968 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்ட மஹாவலி பாரிய மஹாவலி திட்டம் தற்போதைய தேவைப்பாடுகள் இயற்கை வளங்களின் தன்மை மற்றும் பயன்பாட்டை கருத்திற் கொண்டு நாளது வரையான திட்டமொன்றாக தயாரித்தல் அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் ஒரு செயற்பாடாக இருந்ததுடன் அத்திட்டம் 2013 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும் அத்திட்டம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காணி பிரிவின் செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது வர்த்தக மற்றும் முதலீட்டுச் செயற்திட்டத்திற்காக 665 காணித்துண்டுகளை பகிர்ந்தளிப்பதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் 91 காணித்துண்டுகள் மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. மேலும் 635 காணித் துண்டுகளுக்காக மானியப் பத்திரங்கள் / உறுதிப்பத்திரங்கள் / நீண்டகால குத்தகை அனுமதிப்பத்திரங்கள் என்பவற்றை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 227 காணித்துண்டுகளுக்காக மாத்திரம் அந்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(இ) மக்கள் கிராமங்களுக்காக கடன் முன்மொழிவு முறைமையொன்றை செயற்படுத்தும் நோக்கில 2002 ஆம் ஆண்டிலிருந்து சுழற்சி நிதியமொன்றை ஏற்படுத்துவதற்கு அதிகாரசபையினால் ஊவா அபிவிருத்தி ரஜரட்ட அபிவிருத்தி வங்கியில் ரூபா 48,000,000 முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், வங்கிகளுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கை நிபந்தனைகள் செயற்படுத்தாமையால் மேற்குறித்த நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மஹாவலி மதியுரை சேவைகள் பணியக (தனி) கம்பனியின் அமைப்பு அகவிதியின் பிரகாரம் இலங்கையிலும் அதற்கு வெளியிலும் காணி மற்றும் நீர் வளங்கள் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்குரிய சாத்தியவள ஆய்வுகளை மேற்கொள்ளல், காணிப்பயன்பாடு மற்றும் நீர் வளங்கல் செயற்திட்டமிடல் மற்றும் செயற்படுத்துதல். சமூக பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டங்களை திட்டமிடல், வடிவமைத்தல் மற்றும் செயற்படுத்துதல் சூழல் மாசடைவதைக் கட்டுப்படுத்தும் செயற்திட்டங்ளை நடைமுறைப்படுத்துதல் போன்ற நோக்கங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. போதும் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் உரிய பிரிவுகளில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் குறிப்பிடாமை, மற்றும் செயலாற்றல் அறிக்கை செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தயாரிக்கப்படாமை காரணமாக திட்டமிடப்பட்டதன் பிரகாரம் ஒவ்வொரு பிரிவுகளிலும் செயலாற்றல் அடையப் பெற்றுக்கொள்ளப்பட்டதா என்பதனை பரீட்சிக்க முடியாதிருந்தது.

(உ) மஹாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய வர்த்தக (தனி) கம்பனியின் அமைப்பு அகவிதியின் பிரகாரம் பண்ணைகளில் பயிர்செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளல், மொத்தமாகப் சில்லறையாகவும் கோழி வளர்ப்பின மேற்கொள்ளல், விவசாயிகளுக்கு கோழி வளர்ப்பிற்கான தேவையான உணவு உற்பத்தி, மாடுகள், பன்றிகள், கோழிகள் போன்ற விலங்கினங்களை பெருக்குதல், விற்பனை செய்தல், மேம்படுத்துதல் தயாரித்தல் மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகள் மற்றும் பழவகை, தானிய வகைகளுடன் அண்மித்த வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற நோக்கங்கள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன், எருமை மாடு, பசு மாடு, கோழி, பன்றி மற்றும் சிறிய அளவில் ஆடு வளர்ப்பு, பாலுடன் அண்மித்த உற்பத்தி நடவடிக்கைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

(ஊ) இயற்கை வளங்கள் முகாமைத்துவ (தனி) சேவைகள் கம்பனியின் அமைப்பு அகவிதியின் பிரகாரம் இலங்கையிலும், அதற்கு வெளியேயும் மேற்கொள்ளும் நில பரிசோதனை, விமான படமெடுத்தல், செய்மதி படமெடுத்தல், பூகோள தகவல் முறைமை, பூகோள அமைவிட முறைமை, புவிச்சரிதவியல் மண், புவி மாதிரி, காணி பயன்பாடு, தாவரங்கள், உயிர் பல்வகைத் தன்மை, நீரின் தரம், போன்ற சுற்றாடல் நியதிகளை படமெடுத்தல், பகுப்பாய்வு செய்தல், புவிச்சரிதவியல் வளங்களின் மதிப்பீடு, பூமி பயன்பாட்டுத் திட்டம், மண்ணரிப்பு மற்றும் பாதுகாப்பு பிரதேச முகாமைத்துவம் மருந்து தாவர பயிர்ச்செய்கை மற்றும் நிலையான சேதனப் பசளை பயிரிடல் முறைமைக்காக ஆலோசனை வழங்குதல், திட்டங்களை தயாரித்தல் மற்றும் பயிற்சியளிக்கப்பட வேண்டிய போதிலும் சுற்றாடல் அறிக்கை ஒழுங்குதல் மாதிரிக் கம்பனியின் பிரதான செயற்பாடாக இருந்தது. தொழில்நுட்ப அறிவுடன் கூடிய பதவியணியினரொன்று கம்பனியிடம் இல்லாதிருந்தமையால் வெளிதரப்பினரால் சுற்றாடல் அறிக்கை தயாரிக்கப்பட்டு பெற்றுக்கொள்வதுடன் அவ்வறிக்கையின் சரியான தன்மையை உறுதிப்படுத்தும் இயலுமை கூட கம்பனியிடம் காணப்படவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மஹாவலி ‘‘எச்’’வலயத்திற்குரிய தேவையான பொருட்களை கொள்வனவு செய்யும் போது வழங்குனரின் எழுத்து மூல வேண்டுகோளொன்று அல்லது உடன்படிக்கையொன்றோ இல்லாமல் பெறுகை குழுவின் அங்கீகாரம் மற்றும் கொள்வனவு கட்டளையின் அடிப்படையில் வழங்கல் முற்பணமாக வழங்குனரின் பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 5,123,027 பெறுமதியான 28 காசோலைகள் அதிகாரசபையின் ஒவ்வொரு பிரிவின் உத்தியோத்தருக்கும் வழங்கப்பட்டிருந்தது. உரிய செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமையின் பேரில் அக்காசோலையின் 03 மாதங்களிற்கு பின்னர் இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

(ஆ) ரூபா 42,520,000 கிரயமான 02 காணித் துண்டுகள் கட்டணம் செலுத்தப்படாமல் வெளித்தரப்பினரால் பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும் கையேற்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கொத்மலை பூகோள தகவல் முறைமை பிரிவினால் 3,118 கி.மீ அளவிலான மஹாவலி நீரேந்து வலயத்தின் பூகோள தகவல் தரவு களஞ்சியமொன்றை தயாரித்தல் மற்றும் நாளதுவரையாக்குதல் செய்மதி படப்பிடிப்பின் மூலம் மஹாவலி வலயங்களில் காணிப் பராமரிப்பு ஒழுங்குகள் தொடர்பான வரைபடங்களை தயாரித்தலும் நாளதுவரையாக்கலும், செய்மதி படப்பிடிப்பின் மூலம் மஹாவலி நீரேந்து பிரதேசத்தின் காணிப் பயன்பாட்டு ஒழுங்குபடுத்தலில் மாற்றங்களை கட்டுப்படுத்தல், மீள் நடுகைக்காக பொருத்தமான காணி மற்றும் மண் பாதுகாப்பு மேற்கொள்ளப்பட வேண்டிய பிரதேசங்களை இனங்காணுதல், மழைவீழ்ச்சி தகவல்களின் பிரகாரம் வரைபடங்களை தயாரித்தலும் நாளதுவரையாக்குதலும் பூகோள தகவல்கள் முறைமை மற்றும் செய்மதி படப்பின் மூலம் காணி பயன்பாட்டு

நடவடிக்கைகள் திட்டமிடல் மற்றும் நீர் முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளல் ஆகிய செயற்பாடுகளுக்காக 2006 ஆம் ஆண்டின் போது 11 உத்தியோகத்தர்கள் கடமைகளை நிறைவேற்றியிருந்த போதிலும், 2006 ஆம் ஆண்டின் பின்னர் ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். ஆதலால் தற்போது உரிய செயற்பாடுகளை நிறைவேற்றலின் பேரில் மேல் மஹாவலி நீரேந்து வலயம் உட்பட மஹாவலி வலயங்களில் சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்பு நடவடிக்கைகள் முகாமைத்துவம் படிப்படியாக மேற்கொள்ளப்பட இருந்த சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேவையான உத்தியோகத்தர்களை அதிகரித்து மேற்படி செயலாற்றலை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டிற்குரிய வருடாந்த பௌதீக இருப்பு மெய்மையாய்வு குழுவின் பரிந்துரையின் பிரகாரம் விக்டோரியா வலயத்தில் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத 126 தளபாட உபகரணங்கள் மற்றும் பௌதீக உருப்படிகளை கைதவிர்ப்பதற்கு 2016 ஆகஸ்ட் 18 ஆந் திகதி பிரதிப் பணிப்பாளர் நாயகத்தினால் (நிர்வாகம் மற்றும் நிதி) அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் வராப்பிட்டிய களஞ்சிய வளவில் வைக்கப்பட்டிருந்தன.

(உ) விக்டோரியா வலயத்திற்கு சொந்தமான வராப்பிட்டியவில் அமைந்துள்ள 3 களஞ்சியங்களிலும் விடுதியறை ஒன்றுடன் கூடிய 2 களஞ்சிய வளவுகளும் வதிவிட அறை என்பன சுகாதார திணைக்களத்தின் மருத்துவ வழங்கல் பிரிவினால் பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும் அவை சட்டரீதியாக அப்பிரிவுகளுக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அவ்வளவில் காணப்படும் ஏனைய கட்டிடங்கள் நீண்டகாலமாக திருத்தம் செய்யப்படாமை காரணமாக சேதமடைந்து காணப்பட்டன.

(ஊ) அதிகாரசபையால் 05 கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 439,000,000 ஆன முதலீட்டிற்கான வருடக் கணக்காக எவ்வித பிரதிபலனும் கிடைத்திருக்கவில்லை.

(எ) கொத்மலை இழைய கலாசார பிரிவினால் கடந்த ஐந்தாண்டுகளில் 734,458 மூங்கில் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு 515,837 நாற்றுக்குள் உரிய பிரிவுகளுக்கு வழங்கப்பட்டிருந்தன. இக்கன்றுகளை நடுதல், பராமரித்தல், கவனித்தல் மற்றும் மேம்படுத்தல் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 1979 இன் 23 ஆம் இலக்க இலங்கை மஹாவலி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 13(13) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையினால் வழங்கப்படுகின்ற நீருக்காக அல்லது வழங்கப்படுகின்ற ஏதாவது சேவைக்காக அறவிடொன்று அல்லது கட்டணமொன்று விதிக்க முடியும் என தீர்மானிக்கப்பட்டிருந்தது. மஹாவலி நீரைப் பயன்படுத்தும் வெளித்தரப்பினர் களிடமிருந்து கட்டணமொன்று அறவிடப்பட்ட போதிலும் மஹாவலி நீர்த்தேக்கங்களிலிருந்து மின் உற்பத்திக்காக 1985 ஆம் ஆண்டு முதல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 211,391.93 மில்லியன் கியுபிக் மீற்றர் நீர், மின்சார சபையினால் பாவனைக்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக கட்டணமொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறயினும் அந்த நீர்த்தேக்கங்களின் மற்றும் அணைக்கட்டு பராமரிப்பு செயற்பாட்டிற்காக அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டம் மஹாவலி அதிகாரசபையினால் ஆரம்ப முதல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 8,210 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(ஐ) கொத்மலை, விக்டோரியா மற்றும் ரந்தெனிகல ஆகிய மேல் மஹாவலி பிரதேசத்தில் மஹாவலி இலங்கையின் பிரதான கிளை ஆறுகளின் நீர் மற்றும் வனாந்திரக் காடுகளை பயன்படுத்தி செயற்படுத்தப்பட்ட 46 சிறிய அளவிலான மின் நிலையங்கள் மற்றும் செயற்படுத்துவற்கு அங்கீகாரம் கிடைத்திருந்த 24 நீர் மின் நிலையங்கள் காணப்பட்ட போதிலும் 1979 இன் 23 ஆம் இலக்க இலங்கை மஹாவலி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 3(1), 12 மற்றும் 13 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அரசிறை அறவிடுவதற்கு பொருத்தமான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) அதிகாரசபைக்குச் சொந்தமில்லாத ஜாவத்த பகுதியில் அமைந்துள்ள காணியில் அதிகாரசபையால் ரூபா 76,580,000 பெறுமதியான கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அக்காணியின் உரித்தைக் கையேற்பதற்கு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) பராமரிப்புச் செலவினம் அதிகரித்தமை மற்றும் கால்நடைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் குறைவடைந்தமையால் மீளாய்வாண்டின் போது எச் வலயத்தில் நீராவிய பண்ணைகளுக்குரியதாக இருந்த ரூபா 7,347,608 பெறுமதியான 383 கால்நடைகள் தேசிய கால்நடை வளங்கள் மற்றும் அபிவிருத்தி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தன. கால்நடைகளின் பெறுமதியை அறவிடுவற்காக இரு தரப்பினராலும் இணக்கப்பாடொன்றிற்கு வந்திருக்காததன் காரணமாக கால்நடை வளங்களின் பெறுமதியை அறவிடாமல் இருந்ததுடன் அறவிடப்பட வேண்டிய தொகையாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஓ) (i) மஹாவலி மதியுரை சேவைகள் பணியக (தனியார்) கம்பனி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2016 மார்ச் 24 ஆந் திகதிய 16/0416/704/012 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் மொரகஹகந்த நீர்த்தேக்க நிர்மாண ஒப்பந்தத்திற்குரிய திட்டங்களை மதிப்பீடு செய்து அங்கீகரித்தல் மற்றும் நிர்மாண வேலைகள் மேற்பார்வைக்காக ஆண்டொன்றிற்காக மதியுரை ஒப்பந்தம் ரூபா 167,174,700 தொகைக்கு (வரியில்லாமல்) 2016 மார்ச் 15 ஆந் திகதி முதல் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. கம்பனியை பெறுகை செயற்பாடு பின்பற்றப்பட்டு மதியுரையாளர்கள் தெரிவு செய்வதற்குப் பதிலாக மொறகஹகந்த செயற்திட்டத்தின் செயற்திட்ட முகாமையாளரால் பெயரிடப்பட்டிருந்த ஐந்து உத்தியோகத்தர்கள் உள்நாட்டு மதியுரையாளராக நியமிக்கப்பட்டு மதியுரை மற்றும் கண்காணிப்பு அறிக்கைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. கம்பனியால் அதற்குரிய பட்டியல்களை தயாரிக்கும் நடவடிக்கை மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்தகாரர்களுக்குரிய வெளிநாட்டு மதியுரையாளர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்காக தனியார் பொறியியலாளர் மதியுரைக் கம்பனியொன்றுக்கு உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

- 2011 ஆம் ஆண்டின் போது கம்பனிக்கு எதிராக வெளித்தரப்பினரால் நட்டஈடு கோரி தொடரப்பட்டிருந்த வழக்கிற்காக கம்பனி முன்வராமை காரணமாக 2013 ஆம் ஆண்டில் நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் ரூபா 4.5 மில்லியன் இழப்பீடொன்றை செலுத்துவதற்கு நேர்ந்திருந்தது. இதற்காக 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய இழப்பீடுகளுக்காக எவ்வித நிதி ஏற்பாடும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 2,000,000 நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு 2017 ஆம் ஆண்டின் போது அப்பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இவ்வழக்கு

தொடர்பாக கம்பனி செயலாளரால் தனது கடமைப் பொறுப்புடன் நிறைவேற்றாதிருந்தும் அது தொடர்பாக முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளாமல் சேவையிலிருந்து விலகுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன் அங்கீகாரமொன்று இல்லாமல் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த மேற்குறித்த வழக்கு தொடர்பான சாரதியும் விபத்து தொடர்பில் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படாமல் சேவையிலிருந்து நீக்கப்பட்டிருந்தார்.

(ii) மஹாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய வியாபார (தனியார்) கம்பனி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- கிராந்துருகோட்டை பண்ணையில் 1986 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட பால் தயாரிப்பு நிலையத்தின் ஆரம்ப முதல் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் காணப்பட்டமை தொழிற்சாலை கட்டிடங்கள் பழமையாக இருந்தமை, கூரை பழுதடைந்திருந்தமை மற்றும் மழை நீர் தொழிற்சாலைக்குள் வருதல், வடிகாண் முறைமை சேதமடைந்திருந்தமை, உள்ளக சுத்திகரிப்பு முறைமை பலவீனமாக காணப்பட்டமையால், சுகாதார பாதுகாப்பு சிக்கல் உருவாகியிருந்தமை காரணமாக உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சிரமமாக இருந்தன. மேலும், பலவீனமாக சுற்றாடல் நிலைமையின் பேரில் உற்பத்தி செயற்பாடுகளை மேற்கொள்வதால் எதிர்காலத்தில் கூட சட்டரீதியான சிக்கல்கள் உருவாகக்கூடிய நிலைமை காணப்பட்ட போதிலும் அது தொடர்பாக முகாமைத்துவத்தினால் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ரூபா 8,237,607 மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ரூபா 334,846 ஆன பங்களிப்பு தொகை செலுத்தப்பட வேண்டியிருந்தமையால் எதிர்காலத்தில் கம்பனிக்கு மிகை கொடுப்பனவு செலுத்த வேண்டியேற்படுமென அவதானிக்கப்பட்டது.

- நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 14,929,159 பெறுமதியான காணிகளின் சட்டரீதியான உரித்தினை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- கம்பனியின் அனுமதிக்கப்பட்ட மூலதனமான ரூபா 10 ஆன 5,000,000 பங்குகளில் 03 பங்குகள் தோற்றுவிப்பு பணிப்பாளர்களான வேறு தனியார் கம்பனியொன்றின் மூன்று பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், எஞ்சிய பங்குகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. மஹாவலி அதிகார சபைக்காக கம்பனியின் எந்தவொரு பங்கும் வழங்கப்படாதிருந்தமையால் கம்பனி தொடர்பாக அதிகாரசபையின் உரிமை தொடர்பாக சர்ச்சைக்குரிய நிலைமையொன்று அவதானிக்கப்பட்டது.

**(iii) இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவையின் (தனியார்) கம்பனி**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கம்பனியால் மஹாவலி அதிகாரசபைக்குரிய திகனையில் அமைந்துள்ள கட்டிடமொன்றில் தமது அலுவலகத்தினை நடாத்திச் செல்லப்படுவதுடன் அதற்காக உடன்படிக்கையொன்று காணப்படவில்லை. அவ்வாறே

அதிகாரசபைக்கு மாதாந்த வாடகை கொடுப்பனவினை செய்வற்காக திட்டவட்டமான அடிப்படையொன்று இல்லாமல் இருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதற்குரித்தாக கொடுப்பனவு செய்ய வேண்டிய வாடகை ரூபா 600,000 என கம்பனியால் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. பின்னர் அச்செலுத்த வேண்டிய பணத்தை எவ்வித அங்கீகாரமொன்று இல்லாமல் மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்டு ஏனைய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 4.3 தொழிற்பாட்டு செயற்பாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதினாரசபையின் நீராவிய பண்ணைக்குரிய 26 ஏக்கர் களஞ்சிய காணி அனுராதபுர காணி பதிவாளர் அலுவலகத்தினால் 1989 ஒக்தோபர் 26 ஆந் திகதி 2060 ஆம் இலக்க எல்/4/தம்ப/6/102 உடைய நீண்ட கால குத்தகை மூலம் முப்பது ஆண்டு காலத்திற்கு கால்நடை செயற்திட்ட கம்பனியொன்றுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. வெளித்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டிருந்த இந்த குத்தகை வழங்கலை சரி செய்து அதிகாரசபைக்கு குத்தகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே வரிசை அமைச்சின் செயலாளரின் 2010 செப்தெம்பர் 20 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் நீராவிய பண்ணைக்குச் சொந்தமான 07 கோழிக் கூடுகள் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபைக்குரிய ரூபா 104,394,675 பெறுமதியான கட்டிடங்கள் உடன்படிக்கையொன்று இல்லாமல் 13 அரச நிறுவனங்களால் பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும், அதற்காக வாடகையொன்று அறவிடுவதற்கு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே மஹாவலி பாதுகாப்பு படையணிக்குச் சொந்தமான ரூபா 26,030,780 பெறுமதியான கட்டிடம், 03 பயிற்சி மண்டபங்கள் மற்றும் 24 உத்தியோகபூர்வ வீடுகள் என்பன உடன்படிக்கையொன்று இல்லாமல் 2012 திசெம்பர் 24 ஆந் திகதி முதல் தற்காலிக அடிப்படையில் கொத்மலை சர்வதேச பயிற்சி நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் கையளிக்கப்பட்டிருந்த திகதி முதல் அதிலிருந்து வாடகை வருமானமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 10 தொடர்பாடல் கோபுரங்களை ஸ்தாபிப்பதற்காக ஊடக நிறுவனமொன்றுக்கு எச் வலயத்தில் அதிகாரசபைக்கு சொந்தமான காணிகளை வழங்கும் போது குறித்த குத்தகையாளர்களுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அதில் 05 காணிகளின் வியாபார பெறுமதி அரசின் மதிப்பீட்டாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளாமல் அதிகாரசபையின் அண்ணளவான மதிப்பீட்டின் பேரில் வருடாந்த வாடகை தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மேல் மஹாவலி நீரேந்து பிரதேசத்தின் 7 சிறிய நீர் போசனைப் பிரதேசங்களில் ரூபா 2,277,100 செலவிடப்பட்டு நிறுவப்பட்டிருந்த தன்னியக்க நீர் அளவீட்டு தரவு சேகரிக்கும் உபகரணங்கள் முறைமை மூலம் மஹாவலி கங்கை மற்றும் அதன் கிளை ஆறுகளின் நீர் மட்ட தகவல்களை துரிதமாகவும் இலகுவாகவும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த போதிலும் இந்த தரவுகளை பகுப்பாய்வு செய்து தேவைப்பாட்டின் பிரகாரம் காலரீதியாக அறிக்கையிடுவதற்காக நடைமுறையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மணலாறு வலயத்தின் 12 வாகனங்கள் 01 ஆண்டு முதல் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக திருத்தம் செய்யப்படாமல் வைத்திருந்தமையால் அவ்வாகனங்களை திருத்தம் செய்ய முடியாத நிலைமைக்கு உட்பட்டிருந்ததுடன் வாகனங்களை கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) எச், டீ, மற்றும் பீ வலயங்களில் முதவீட்டாளர்களிற்கு செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்காக அதிகாரசபையால் வழங்கப்பட்ட 4342.51 ஏக்கர் காணிகளில் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காணியின் அளவு 2744.32 ஏக்கர்கள் மாத்திரமாக இருந்தது. அதன் பிரகாரம் எஞ்சிய 1598.19 ஏக்கர் காணியில் உடன்படிக்கை பிரகாரம் செயற்திட்டத்தை ஆரம்பிக்காமைக்கான காரணத்தை ஆராய்ந்து தேவையான சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) பயிர்ச் செய்கைக்காக ‘‘எல்’’ வலயத்தில் 755 ஏக்கர் விசாலமான காணியொன்று 30 முதலீட்டாளர்களுக்கு 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்டிருந்த போதிலும் 2017 யூலை 14 ஆந் திகதி வரையிலும் எவ்வித பயிர்ச்செய்கை நடவடிக்கைகளும் ஆரம்பித்திருக்கவில்லை. காணி வழங்குவதற்கு முன்னர் பொருத்தமான இடம் தெரிவு செய்யப்படாமையால் வனவிலங்குகளிலிருந்து பயிர்ச்செய்கை சேதங்களை தவிர்த்துக் கொள்ள முடியாதிருந்தமையால் காணி வழங்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அதில் மரங்கள் அகற்றப்பட்டமையால் பாரிய சுற்றாடல் சேதமொன்று இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) ‘‘பீ’’ வலயத்தின் மூலம் விவசாய செயற்திட்டங்களுக்காக 123 பேருக்கு 2009 – 2014 காலப்பகுதியில் வழங்கப்பட்டிருந்த 1700 ஏக்கர் காணியில் 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் விவசாய வர்த்தகம் ஆரம்பிக்கப்படாமல் இருந்ததுடன் பல வருடங்கள் கடந்து இருந்த போதிலும் உடன்படிக்கையின் பிரகாரம் அக்காணியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 49 முதலீட்டாளர்களுக்கு காணிகளை வழங்குவதற்காக பெற்றுக்கொண்ட பணிப்பாளர் சபை அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஐ) நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட காணிகளுக்காக 149 முதலீட்டாளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 52,685,874 ஆன குத்தகையொன்று அறவிடப்பட வேண்டிய போதிலும் அவற்றை அறவிடுவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) உப கம்பனியொன்றான மஹாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய வர்த்தக (தனி) கம்பனியின் கீழ் 1999 ஆம் ஆண்டிலிருந்து 07 பண்ணைகள் செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதில் 05 பண்ணைகளை அதிகாரசபைக்கும் வெளித்தரப்பினருக்கும் குத்தகை அடிப்படையிலும் உரித்தை கையளிப்பு அடிப்படையிலும் வழங்கப்பட்டிருந்த போதிலும் அப்பண்ணைகளுக்குரிய ரூபா 16,806,745 பெறுமதியான கட்டிடங்கள் மற்றும் ரூபா 6,583,340 பெறுமதியான வாகனங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்து ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக காண்பிக்கப்பட்டிருந்தன.

## 4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நீர்த்தேங்கங்களில் சேகரிக்கப்படும் நீர், மின்சார உற்பத்திக்காக சரியாக மதிப்பீடு செய்யப்பட்டு பயன்படுத்துவதற்கு திட்டமிடப்படாததன் காரணமாக 1985 ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு இறுதி வரை மழைவீழ்ச்சிக் காலப்பகுதியில் 05 மஹாவலி நீர்த்தேங்களிலிருந்து 19,302 மில்லியன் கீயூபிக் மீற்றர் நீர், நீர்த்தேக்கங்களிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தது. இறுதியாக நீர் மின் உற்பத்தி செய்யப்படும் ரன்தம்பே மற்றும் போவதன்ன நீர்த்தேங்களிலிருந்து மாத்திரம் வெளியேறியிருந்த நீரின் அளவு 8495 மில்லியன் கியூபிக் மீற்றர் ஆக இருந்ததுடன் கணிப்பீட்டின் பிரகாரம் அதன் பெறுமதி ரூபா 57,125 மில்லியனாக இருந்தது.

(ஆ) மின்சார கம்பி முறைமை பொருத்துதல் மின்சார சபையால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடொன்றாக இருந்த போதிலும் மாதுரு ஓயா மற்றும் 2 மின் நிலையங்களின் இயளலவினை அதிகரிப்பதற்காக புதிய மின் கம்பி முறைமையொன்று முதலீட்டாளர் ஒருவரினால் ரூபா 150,000,000 கிரயத்தில் நிறுவப்பட்டிருந்தது. இச்செலவினம் முதலீட்டாளர் மற்றும் அதிகார சபைக்கு இடையே அரசிறை 65.8 : 34.2 என்ற விகிதத்தில் பகிரப்பட வேண்டுமென அதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அதிகாரசபைக்கு முதலீட்டாளர்களிடமிருந்து கிடைக்கும் அரசிறை மற்றும் அதிகாரசபையினால் முதலீட்டாளருக்கு செலுத்த வேண்டிய பணத்தை ஈடு செய்வதற்காக மஹாவலி அதிகாரசபை, மின்சார சபை மற்றும் முதலீட்டாளருக்கு இடையே முத்தரப்பு ஒப்பந்தமொன்றும் மேற்கொள்ளப்பட வேண்டுமென பணிபாளர் சபை தீர்மானித்திருந்தது. குறித்த தரப்பினர் முத்தரப்பு ஒப்பந்தமொன்றை மேற்கொள்ளாமல் இருந்ததுடன் மேற்குறித்த குழுவின் பரிந்துரையின் பிரகாரம் முதலீட்டாளர் செலவிடப்பட்ட செலவினத்தில் ரூபா 51,300,000 அதிகாரசபையினால் செலவிடப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக ரூபா 75,000,000 அதிகாரசபைக்கு கிடைத்த அரசிறையில் கழித்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) 1992 யூலை 08 மற்றும் ஒக்தோபர் 14 ஆந் திகதிய நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களின் பிரகாரம் திரைப்பட நிலையத் தொகுதியொன்றையும் செயற்பாட்டு இடமொன்றை நிர்மாணிப்பதற்கு மதிப்பீட்டு பெறுமதியில் 6 சதவீதம் அல்லது கூடியது 10 சதவீதத்திற்கு மேற்படாத நீண்டகால குத்தகை சதவீதத்திற்கு உட்பட்டு 50 ஆண்டுகளுக்கு அதிகாரசபையின் திகனயில் அமைந்துள்ள 4.23089 ஹெக்டேயார் காணி மற்றும் கட்டிடத் தொகுதி என்பவற்றை வெளிநாட்டு கம்பனியொன்றுக்கு வழங்க அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 1993 மே 21 ஆந் திகதி கம்பனியுடன் மேற்கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் கட்டிடத் தொகுதி மற்றும் நிலம் ரூபா 20 மில்லியனுக்கு மதிப்பிடப்பட்டிருந்தது. அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மதிப்பீட்டுப் பெறுமதியில் 6 சதவீதமான வரி சதவீதத்தின் கீழ் 1993 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டிய் இறுதியில் அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா 28,800,000 மற்றும் வலயங்களினால் இதற்காக வழங்கப்பட்டிருந்த மேலும், 11 வீடுகளுக்காக அறவிடப்பட வேண்டிய குத்தகை வாடகை ரூபா 4,542,500 மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் தற்போது இச்சொத்துக்களின் உரித்தினை பெற்றுக் கொள்வதற்காக அதிகாரசபையினால் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய தீர்ப்பு மீளாய்வாண்டு இறுதிவரையிலும் கிடைத்திருக்கவில்லை.

(ஈ) எச் வலயத்திற்குரிய எப்பாவல பொஸ்பேட் படிவுடன் கூடிய 17,942 ஹெக்டேயர் காணிக்காக அரசு மற்றும் அரச கணிப்பொருள் ஆய்வு மற்றும் கணிப்பொருள் அபிவிருத்தி சபையினால் 1992 ஏப்ரல் 09 ஆந் திகதி கைச்சாத்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் குத்தகைத் தொகையை மாகாண காணி ஆணையாளருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டமையால் இக்காணியிலிருந்து 1992 முதல் 2015 ஆம் ஆண்டு வரை எவ்வித குத்தகைப் பணமும் அதிகாரசபைக்கு கிடைத்திருக்கவில்லை. அதிகாரசபை 2016/2017 ஆம் ஆண்டுகளின் போது இலங்கை பொஸ்பேட் கம்பனியுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஒரு கியூப் பொஸ்பேட்டிற்காக ரூபா 300 சேவைக் கட்டணமொன்றை செலுத்துவதற்கு இணங்கப்பட்டிருந்த போதிலும், அதிகாரசபையின் மேற்பார்வையின் கீழ் அகழ்வு இடம்பெறாமையால் உள்ளவாறு அகழப்பட்ட பொஸ்பேட் அளவினை அறிந்து கொள்ள முடியாமல் இருந்தது. அக்கம்பனியின் அறிக்கையின் பிரகாரம் 6,011 கியூப்களுக்காக ரூபா 1,803,300 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் அகழ்வின் பின்னர் இடத்தை புனரமைப்பு செய்யாமையால் பூமியில் ஆங்காங்கே பாரியளவு பாசனம் எஞ்சியிருந்தது.

மஹாவலி அதிகாரப் பிரதேசத்தில் மேலும் 9 ஹெடேயர் அபடைட் அகழ்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அகழ்வு ஆராய்ச்சி அனுமதிப்பத்திரத்தை பரீட்சிக்கும் போது காணியின் உரித்து பிரதேச செயலாளருக்கு உரித்தாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், இந்நிலைமையை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தெற்கு அதிவேக அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக 500,000 கியூப் அளிவலான மண் வழங்குவதற்காக வளவ அதிகாரப் பிரதேசத்தில் மயுரபுர பிரிவில் மஹாவலி அதிகாரசபைக்கு சொந்தமான 671 ஏக்கர் காணி அளவிடப்பட்டு மண் வெட்டுவதற்காக 29 நபர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டு இரண்டு பேருக்கு அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மஹாவலி அதிகாரசபையின் உள்ளக சுற்றறிக்கை பிரகாரம் அதிகாரப் பிரதேசத்தின் கனியப்பொருட்களை அகற்றுவதற்காக வலய பௌதீக திட்டக் குழுவின் அங்கீகாரம் மற்றும் காணி வழங்குவதற்கான தலைமை அலுவலகத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன் ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அறிக்கையொன்றோ சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையொன்றோ பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) குத்தகை அடிப்படையில் மண் வெட்டுவதற்காக குத்தகையாளருக்கு வழங்கப்பட்டிருந்த 08 ஏக்கர் அளவிலான காணி அளவு 2016 மார்ச் 23 ஆந் திகதிய குத்தகையாளரின் வேண்டுகோளின் பிரகாரம் உரிய அங்கீகாரமின்றி 50 ஏக்கர் வரை அதிகரிப்பதற்கு வதிவிட விடுதி வியாபார முகாமையாளரால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே சுற்றாடல் பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளாமல் இரண்டு சந்தர்ப்பங்களில் வதிவிட வியாபார முகாமையாளரால் அகழ்வு அனுமதிப்பத்திரத்தை நீடிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

(iii) காணி பயன்பாட்டுத் திட்ட ஆய்வொன்று மற்றும் முறையான மதிப்பீடொன்று இல்லாமல் வலயப் பொறுப்பு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்து மண் வெட்டப்பட்டமையால் வனவிலங்குகளின் வாசஸ்தலங்கள் இல்லாது போதல், வர்த்தக ரீதியான பெறுமதியொன்றுடன் கூடிய மற்றும் இல்லாத தாவரங்கள் அழிவடைதல் மற்றும் நிலக்கீழ் நீர் மட்டத்துக்கு தாக்கமொன்று ஏற்படுதல் போன்ற வெவ்வேறு சுற்றாடல் சிக்கல்கள் உருவாகியிருந்தன. அளவிடப்பட்ட காணிகளில் 115 ஏக்கர் அளவில் யானை முகாமைத்துவ பிரதேசத்திற்கு உரித்தாக இருந்த காரணத்தினால் அதற்காக சுற்றாடல் அதிகாரசபை மற்றும் வனசீவராசிகள் திணைக்களத்தினதும் பரிந்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iv) புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்தின் கட்டளையின் பிரகாரம் அகழ்வு இயலளவு 1000 கியூப் மற்றும் அகழ்வு ஆழம் 08 அடிக்கு மேற்படக்கூடாத போதிலும் வதிவிட வியாபார முகாமையாளரால் அகழ்ந்த ஆழம் 15 மீற்றர் (49 அடி) ஆகவும் அகழ்வு இயலளவு 3,000 கியூப் வரையும் அதிகரிக்கப்பட்டிருந்தது. மண் அகற்றப்பட்டதன் பின்னர் நிலத்தில் நீர் சேரும் வகையில் ‘‘பதன’’ நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் பரப்பளவு, ஆழம், அமைப்பு தொடர்பாக திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) உரிய திட்டமொன்றின் பிரகாரம் காணி வழங்காமையால் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்து மண் வெட்டப்பட்டிருந்ததுடன் அளவீட்டு அறிக்கைகளின் பிரகாரம் மண் வெட்டுவதற்காக வழங்கப்பட்டிருந்த இரண்டு இடங்களிலிருந்து வெட்டி அகற்றப்பட்டிருந்த மண்ணின் அளவு 137,719 கியூப்களாக இருந்த போதிலும் 5,000 கியூப் மணலுக்காக மாத்திரம் ரூபா 2,800,000 ஆன காணி பயன்பாட்டுக் கட்டணங்கள் அதிகாரசபைக்கு கிடைத்திருந்தது. கூடுதலாக அகற்றப்பட்டிருந்த 132,719 கியூப் மண்ணிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 85,522,640 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இச்செயற்திட்டத்திற்கு தேவையான மண் முறைப்படி அகற்றுவதற்காக திட்டமிடப்படாததன் காரணமாக வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு செயற்திறனான பங்களிப்பொன்றை வழங்குவதற்கும், சுற்றாடல் சேதங்களை குறைக்கும் வகையில் மண்ணை அப்புறப்படுத்துவதற்கும் மண்ணிற்குப் பதிலாக அதிகாரசபைக்கு ரூபா 280 மில்லியன் அளவிலான வருமானமொன்றை ஈட்டுவதற்கான சந்தர்ப்பமொன்றும் இல்லாமல் போயிருந்தது.

(ஊ) விக்டோரியா – கொத்மலை வலயத்தினால் திகன டொலமைட் படிவு 2005 ஆம் ஆண்டின் போது மஹாவலி வென்ஷர் கெப்பிடல் (தனி) கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது டொலமைட் படிவினை மீண்டும் வலயத்திற்கு கையேற்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் பிரகாரம் டொலமைட் செயற்திட்டத்தின் ஆவணங்கள், வெடிபொருள் களஞ்சியம் உரிய அனுமதிப்பத்திரங்களை முறையாக கையளிப்பதற்கும் மேற்குறித்த கம்பனியின் கீழ் இதுவரை அகழப்பட்ட நபர்களிடமிருந்து மேற்குறித்த கம்பனிக்கு எவ்வித பணத்தை அறவிடுவதற்கு இல்லையென உறுதிப்படுத்திக் கொண்டு அந்நபர்களுடன் உடன்படிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிப்பாளர் நாயகத்தினால் 2014 செப்தெம்பர் 17 ஆந் திகதி வலயத்தின் வதிவிட வியாபார முகாமையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நாளாந்த செலவினத்திற்காக போதியளவு பணத்தைக் கையில் வைத்து கொண்டு எஞ்சிய பணத்தை முதலீடு செய்தற்காக கவனம் செலுத்தாமல் மீளாய்வாண்டின் இறுதியில் தலைமை அலுவலகத்திலும் 11 வலயங்களிலும் ரூபா 254,043,270 தொகை கையிலுள்ள காசாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 06 வலயங்களிலும் அதிகாரசபையின் ஒரு பிரிவிலும் ரூபா 131,696,730 பெறுமதியான விளைவற்றுக் காணப்படும் 442 கட்டிடங்களுக்கு இடையே பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத கட்டிடங்கள் 262 உம் பயன்பாட்டிற்கு பொருத்தமான 34 கட்டிடங்கள் மற்றும் திருத்தம் செய்து மீண்டும் பயன்படுத்தக் கூடிய 146 கட்டிடங்கள் காணப்படுவதால் அக்கட்டிடங்களை மேலும் சேதமடைவதற்கு முன்னர் திருத்தம் செய்வதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நீராவிய பண்ணையில் 02 லொறிகள், 03 உழவு இயந்திரங்கள், 04 வீடுகள், 02 கட்டிடங்கள், 12 கோழிக் கூடுகள், 05 பன்றித் தொழுவங்கள், ஆட்டுத் தொழுவமொன்றும், கோழி இறைச்சி உற்பத்தி செய்யும் இடமொன்றும் விளைவற்றுக் காணப்பட்டமையால் அச்சொத்துக்களை கைதவிர்ப்பதற்கு அல்லது பயன்பாட்டிற்கு எடுப்பதற்கும் முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பொல்கொல்லையில் அமைந்துள்ள பூகோள தகவல் முறைமை (GIS) பிரிவு மற்றும் 2007 ஆம் ஆண்டின் போது கொத்மலை சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்பு பிரிவிற்கு சொந்தமாகக் காணப்பட்ட கணனியொன்று, மடிக் கணனியொன்று, 03 ஜீ.பீ.எஸ் உபகரணங்கள், 06 மேசைகள், 07 கதிரைகள், 03 பிரின்டர்கள், டிஜிட்டல் கமராவொன்று, டிஜிட்டல் காப்பறையொன்று, ஸ்கேனர் ஒன்று, என்பன விளைவற்றுக் காணப்பட்டன.

(உ) அதிகாரசபைக்குச் சொந்தமான மணவாறு வலயத்தின் ரூபா 9,953,619 பெறுமதியான 10 அறைகளுடனான சுற்றுலா விடுதியொன்றும் இன்னுமொரு, கட்டிமொன்றும் ''பீ'' வலயத்தின் தென் பகுதி அபிவிருத்தி செயற்திட்டத்திற்குரிய ரூபா 5,492,833 பெறுமதியான ஆரம்ப பாடசாலை கட்டிடமொன்றும் மலசல கூட முறைமை என்பன 2015 ஆம் ஆண்டிலிருந்து பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஊ) மஹாவலி எச் வலயத்தில் ரூபா 1,484,500 பெறுமதியான பயிர் நாற்றுக்கள் மற்றும் புல் நாற்றுக்கள் அகற்றும் 10 இயந்திரங்கள் 2016 ஆம் ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டன. மணலாறு வலயத்தில் காணப்படும் 20 மாடுகளை வைத்திருப்பதற்கு நிர்மாணிக்கப்பட்ட மாட்டுத் தொழுவமொன்றில் 26 மாடுகள் மாத்திரம் வைக்கப்பட்டிருந்தமை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(எ) மணலாறு பிரதேசத்தில் மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 2013 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 6,513,390 பெறுமதியான 6,409 உபகரணங்களும் பொருட் உருப்படிகளும் 1992, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,425,065 பெறுமதியான தளபாடங்களும் உபகரணங்களும் ''எல்'' வலயத்தின் களஞ்சியத்திலும் சுற்றுலா விடுதியிலும் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஏ) மஹாவலி அதிகாரசபையின் ''சீ'' வலயத்தினால் மஹாவலி கால் நடை வளங்கள் மற்றும் விவசாய வர்த்தக (தனி) கம்பனிக்குரித்தான கிராந்துருதோட்டை பண்ணையை கால்நடை வளர்ப்பு பயிற்சி நிலையமொன்றாக மாற்றும் நோக்கில் 2014/2015 ஆம் ஆண்டுகளில் ரூபா 12,501,900 செலவில் நிர்மாணிக்கப்பட்ட மாட்டுத் தொழுவம், ஆட்டுத் தொழுவம் உட்பட நிர்மாணங்கள் மற்றும் பொருட்கள் ரூபா 8,967,600 இற்கு கிரயத்தில் மதிப்பிடப்பட்டு 2016 பெப்ரவரி 08 ஆந் திகதி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய வர்த்தக கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இந்நிர்மாணம் மற்றும் பொருட்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்காக குறிப்பான திட்டமொன்றோ நடைமுறையொன்றோ கம்பனியிடம் இல்லாதிருந்தமையால் கையளிக்கப்பட்ட திகதி முதல் அச்சொத்துக்கள் விளைவற்று சிதைவடைந்து வந்தன.

(ஐ) மஹாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய வர்த்தக கம்பனிக்குரித்தான கிராந்துருதோட்டையில் 1,054 ஏக்கர் அளவிலான பண்ணை காணியில் எவ்வித பயிரொன்றும் செய்கைப்படாதிருந்ததுடன், கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகள் சிறிதளவேனும் மேற்கொள்ளாத காரணத்தினால் நிலம் குறைப் பயன்பாட்டுடன் காணப்பட்டது. அங்கு காணப்படும் பால் உற்பத்தியுடன் அண்மித்த தொழிற்சாலையில் ரூபா 2,720,000 பெறமதியான நிலையான சொத்துக்கள் 2013 ஆம் ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் ரூபா 2,056,000 கிரயமான 06 வாகனங்களும் இயந்திரமொன்றும் கிராந்துருகோட்டை பண்ணை அலுவலக காணி விளைவற்ற வகையில் காணப்பட்டன.

## 4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மஹாவலி மதியுரை சேவைகள் பணியகம் (தனியார்) கம்பனியினால் 2000 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய பெறுமதி சேர் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் உழைக்கும் போது செலுத்தும் வரி என்பவற்றை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு முறைப்படி அனுப்பி வைக்காமையால் மீளாய்வாண்டின் போது கம்பனிக்கு ரூபா 1,810,836 ஆன தண்டப்பணமொன்றை செலுத்துவதற்கு நேர்ந்திருந்தது. மேலும் குறித்துரைக்கப்பட்ட திகதியில் பங்கிலாப கூற்று தயாரிக்காத காரணத்தினால் 2015 ஆம் ஆண்டின் இலாபத்துக்குரிய மீளாய்வாண்டின் ரூபா 55,807 பங்கிலாப வரி (Deemed dividend tax) கொடுப்பனவு செய்ய நேர்ந்திருந்தது.

(ஆ) மஹாவலி ''எல்'' வலயத்தினால் மக்கள் கிராமம் ஒன்றிற்காக நிர்மாணிக்கப்பட்ட கிணறுகளிலிருந்து நீரை எடுப்பதற்கு தேவையான மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு மின்சார சபைக்கு 2016 திசெம்பர் 30 ஆந் திகதி எழுதிய ரூபா 25,202,879 பெறுமதியான இரண்டு காசோலைகள் வழங்கப்படாமல் கையில் வைத்துக் கொண்டு 2017 மார்ச் 24 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது மதிப்பிடப்பட்ட விலை விபரங்கள் அதிகரித்தமையால் சபைக்கு செலுத்த வேண்டிய அக்கொடுப்பனவு தாமதமான காரணத்தினால் புதிய விலை மதிப்பீட்டு விபரங்களின் பேரில் கொடுப்பனவு செய்ய நேர்ந்திருந்தமையால் ரூபா 2,121,320 ஆக மேலதிகத் தொகையொன்று கொடுப்பனவு செய்ய நேர்ந்தது.

## 4.7 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் ரூபா 466,312,000 ஆன ஒப்பந்த பெறுமதிக்கு மணலாறு கஜாபாபுர கிராமத்தில் இருந்து நெடுங்கேணி நகர் வரையான வீதி 2016 திசெம்பர் 08 ஆந் திகதி முதல் 06 மாதங்களில் நிர்மாணிக்கப்பட்டு மஹாவலி அதிகாரசபைக்கு கையளிப்பதற்கு இணங்கி அதிகாரசபையால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2017 ஏப்ரல் வரை ஒப்பந்த தொகையில் ரூபா 390,085,714 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2017 யூலை 11 ஆந் திகதி வரையில் மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது காட்டுப்பிரதேசங்கள் சுத்திகரிக்கப்பட்டு 23 சிறிய பாலங்கள் / மதகுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டன. எவ்வாறாயினும், 2017 யூன் 08 ஆந் திகதி நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய இந்த ஒப்பந்த செயற்பாடு பூர்த்தி செய்யப்படாதிருந்த போதிலும், அது தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மணலாறு வலயத்தின் பயிர்ச்செய்கை கிணறுகளை நிர்மாணிப்பதற்காக நிலக்கீழ் பரிசோதனையொன்று (சாத்தியவள ஆய்வொன்று) மேற்கொள்வதற்காக ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்திற்கு ரூபா 2,530,000 தொகை 2014 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் மூலம் 48 இடங்களில் பயிர்ச்செய்கை கிணறுகளை நிர்மாணிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டு ஏனைய 32 இடங்களுக்காக உரிய ஆய்வொன்றின் பின்னர் குழாய் கிணறுகளை நிர்மாணிப்பது பொருத்தமென பரிந்துரைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் ரூபா 4,203,200 செலவிடப்பட்டு 17 குழாய் கிணறுகளின் நிர்மாணம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.

(இ) மணலாறு வலயத்தில் 2014 ஆம் ஆண்டின் போது 25 குழாய்க் கிணறுகள் (Bore hole) மற்றும் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் 40 குழாய் கிணறுகளை நிர்மாணித்தல், நீர் உள்ளடக்கம் மற்றும் நீர் மாதிரி பரிசோதனை மேற்கொள்ளல், அதற்காக தேவையான 25 நீர்த் தாங்கிகளை வைப்பதற்கான இடங்களை நிர்மாணிப்பதற்காக (நீர்ப் பம்பிகளுடன்) மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 46,412,996 செலவிடப்பட்டிருந்த போதிலும் 2017 ஆகஸ்ட் 21 ஆந் திகதி வரையிலும் அக்கிணறுகளில் நீரைப் பயன்படுத்தக்கூடிய வகையில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் இச்செயற்திட்டத்தின் நலன்களை பெற்றுக் கொள்வதற்காக தேவையான மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதாகவும் நீர்த் தாங்கி வைப்பதற்கான ஆதாரங்களுக்களுக்காகவும் மேலும் ரூபா 73,205,264 செலவிடுவதற்கு நேர்ந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) பெறுகை செயற்பாடுகளிலிருந்து விலகி மீளாய்வாண்டின் போது மஹாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவாசய வர்த்தக (தனி) கம்பனி ரூபா 8,407,159 பெறுமதியான கோழிகளுக்கான உணவு மற்றும் ரூபா 2,278,000 பெறுமதியான 19,000 கோழிக் குஞ்சுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. குஞ்சுகள் பல்வேறு நிறுவனங்களில் கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக குஞ்சொன்றின் விலை ரூபா 70 முதல் ரூபா 155 வரையான விலை விலகல் அவதானிக்கப்பட்டது.

### 4.8 வாகனங்கள் பயன்பாடு

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபைக்குச் சொந்தமாக 881 வாகனங்கள் காணப்பட்டதுடன் அதில் 790 வாகனங்கள் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய வாகனங்களாக இருந்தமை காரணமாக வாகனங்களை திருத்தம் செய்வதற்கும் பராமரிப்பதற்குமான செலவினம் முறையே முன்னைய ஆண்டில் ரூபா 67,800,000 மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 102,600,000 ஆக இருந்தன. திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு செலவினம் கூடிய பழைய வாகனங்களை அகற்றுவதற்கோ அல்லது அது தொடர்பாக வேறு பொருத்தமான நடைமுறையொன்றோ எடுக்காமையால் முன்னைய ஆண்டினை விட மீளாய்வாண்டின் போது ரூபா 34,800,000 ஆலும் அல்லது 51.3 சதவீதத்தினாலும் திருத்தம் மற்றும் பராமரிப்புச் செலவினம் அதிகரித்திருந்தது.

(ஆ) ஆரம்ப வேலை கட்டுப்பாட்டு செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு பிரிவின் 2008 ஆம் ஆண்டிலிருந்து செயற்பாடற்றுக் காணப்பட்ட 12 வாகனங்கள் 2010 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது கைதவிர்ப்பதற்கும் கேள்வி மூலம் விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு அப்பிரிவினது பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபையால் வெளித்தரப்பினருக்கு உரித்தான 22 வாகனங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு வந்த போதிலும் அவ்வாகனங்களின் உரித்தை விடுவித்து அதிகாரசபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.9 தாமதமான செயற்திட்டங்கள்

-----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மஹாவலி அதிகாரசபையினால் மணலாறு பிரதேசத்தில் செயற்படுத்துவதற்கு உத்தேச கிவுல்ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்திற்காக 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 1,775 மில்லியன் நிதி ஏற்பாடு ஓதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக சுற்றாடல் அனுமதியை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமையால் அதனை செயற்படுத்த

முடியாதிருந்தது. அந்நீர்த்தேக்க செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளில் ரூபா 182 மில்லியன் அதிகாரசபையின் மணலாறு வலயத்தினால் செயற்படுத்தப்படுகின்ற மணலாறு ஒருங்கிணைந்த செயற்திட்டமான நுழைவு வீதிகள் கிராம அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்காக செலவிடப்பட்டிருந்தன.

(ஆ) மக்கள் கிராமத்திற்கு சுத்தமான நீரை வழங்குவதற்கு தேவையான நீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டு 10 ஆண்டுகள் பராமரிப்பதற்காக ரூபா 30 மில்லியன் தொகைக்கு 2015 செப்தெம்பர் 11 ஆந் திகதி தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்துடன் அதிகாரசபை உடன்படிக்கையொன்று மேற்கொண்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2015 நவம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் தெரிவு செய்யப்பட்ட 12 இடங்களில் சுத்திகரிக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் மூன்று இடங்களில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.10 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்

(அ) மஹாவலி பாதுகாப்பு படையணியின் 40 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 2012 ஆம் ஆண்டின் போது அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் போது அதிகாரசபையினால் ரூபா 29,976,062 ஆன சம்பளம் மற்றும் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ரூபா 18,720,252 ஆன மேலதிக நேரம் மற்றும் பிரயாணச் செலவினம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2017 செப்தெம்பர் 30 வரை அத்தொகையை மீள நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையின் ஹுலுருவெவ வலயத்தின் முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் மற்றும் சாரதியொருவர் அமைச்சிற்கு இணைக்கப்பட்டு அதிகாரசபையால் மீளாய்வாண்டின் போது ரூபா 697,324 ஆன சம்பளம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அத்தொகையை மீள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.11 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதிகாரசபையின் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 12 வெற்றிடங்களும் நடுத்தர முகாமைத்துவ மட்டத்தில் 169 வெற்றிடங்கள் மற்றும் 118 மிகையான பதவியணியினரொன்றாக இருந்தது. அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்காக தற்காலிகமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த 41 பேர் மிகை பதவியணியில் உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் மற்றும் நிதி), பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் ஒழுங்குபடுத்தல்), பணிப்பாளர் (மஹாவலி கேந்திரம்) மற்றும் ‘‘சீ’’ ‘‘பீ’’ மற்றும் ஹுருலுவெவ வலயங்களின் பிரதி வதிவிட வியாபார முகாமையாளர் ஆகிய பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் பொருத்தமான உத்தியோகத்தர்களை நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் வெற்றிடமான பதவிகளில் கடமை மேவுகை புரிவதற்காக ஒப்பந்த அடிப்படையிலும் விடுவிப்பு அடிப்படையிலும் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர்.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளர் ஒருவர் சமூக விஷேட நிபுணர், புவிச்சரிதவியாளர், 40 பொறியியலாளர்கள், 13 பொறியியலாளர் உதவியாளர்கள், 12 தொழில்நுட்பவியாளர்கள் மற்றும் 51 முகாமைத்துவ உதவியாளர்கள் உட்பட 369 உத்தியோகத்தர்கள் ஆன பதவியணியனர் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சிற்கும் மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சிற்குரிய செயற்திட்டங்களுக்கும் இணைக்கப்பட்டிருந்தனர்.

அவ்வாறே உத்தியோகத்தர்களை விடுவிப்பதனால் அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் பதவிகளில் சேவை புரிவதற்கு அந்த உத்தியோகத்தர்களுக்கு முடியாதிருந்ததுடன் அந்த விடுவிக்கப்பட்ட பதவியணியின் பதவிகளில் வெற்றிடங்கள் இல்லாததன் காரணமாக அப்பதவிகளுக்கு புதிய உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்வதற்கு முடியாதிருந்தது.

(ஈ) இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனி) கம்பனி மற்றும் மஹாவலி மதியுரை சேவைகள் பணியக (தனி) கம்பனிக்காக குறித்துரைக்கப்பட்ட பதவியணியொன்றும் அதற்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அல்லது பணிப்பாளர் சபை மூலம் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) வேறொரு அமைச்சொன்றில் நிரந்தர நியமனமொன்றை வகிக்கும் ஒருவர் மஹாவலி மதியுரை சேவைகள் பணியகம் (தனியார்) கம்பனியின் செயலாளராக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் முறையான நேர்முகப் பரிசோதனையொன்று நடாத்தப்படாமல் கணக்காளர் பதவிக்காக இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனி) கம்பனி ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார்.

(ஊ) 2010 ஒக்தோபர் முதல் வரிசை அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்த மஹாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய வர்த்தக (தனி) கம்பனியின் நீராவிய பண்ணைக்கு இணைக்கப்பட்டிருந்த 06 ஊழியர்களின் சம்பளம், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியங்களின் பங்களிப்பு தொகையை அமைச்சினாலும் தற்போது மஹாவலி அதிகாரசபையினாலும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் இந்த ஊழியர்களை முறைப்படி விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களையும் வரைவு ஆண்டறிக்கையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மஹாவலி மதியுரை சேவைகள் (தனி) கம்பனி மற்றும் இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனி) கம்பனி என்பவற்றினால் 2017 யூன் மாதத்தின் போதும் அதிகாரசபையினால் 2017 திசெம்பர் மாதத்தின் போதும் கணக்காய்விற்காக நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதனுடன் வரைவு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 அரச நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் மஹாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய வியாபார (தனி) கம்பனி மற்றும் இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனி) கம்பனி என்பவற்றினால் தமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக எதிர்காலத்திட்டங்கள் உள்ளடக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்**

(அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படாமல் இருந்ததுடன் மீளாய்வாண்டின் செயலாற்றலுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட திருத்திய செயல்நடவடிக்கைத் திட்டம் 2016 திசெம்பர் 29 ஆந் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அதிகாரசபையின் செயலாற்றல் அறிக்கை 2018 சனவரி 10 ஆந் திகதி வரையில் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் செயற்பாடுகளை முறைப்படி செயற்படுத்துவதற்காக மஹாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய வர்த்தக (தனியார்) கம்பனி மற்றும் இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனி) கம்பனியினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.4 உள்ளகக் கணக்காய்வு**

2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்ட அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வாளர் (பணிப்பாளர்) பதவியில் 2015 ஆம் ஆண்டிலிருந்து பிரதான உள்ளகக் கணக்காய்வாளரால் கடமை நிறைவேற்றப்பட்டு வந்ததுடன் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்ட தகைமை பூர்த்தி செய்த உத்தியோகத்தர் ஒருவரை அப்பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதிகாரசபை தவறியிருந்தது.

**5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு**

இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனி) கம்பனியினால் மீளாய்வாண்டிற்காக பாதீடு தயாரிக்கப்படாதிருந்ததுடன் அதிகாரசபையின் மஹாவலி மதியுரை சேவைகள் பணியகம் (தனி) கம்பனியினதும் மஹாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய முயற்சிகள் (தனி) கம்பனியினதும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே விலகல் முறையே 10 சதவீதம் முதல் 582 சதவீதம் வரையிலும் 11 சதவீதம் முதல் 121 சதவீதம் வரையிலும் 14 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையாக இருந்தன. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**5.6 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை மின்சார சபையின் மொத்த நீர்மின் உற்பத்தியில் 50 சதவீதம் அளவு மஹாவலி நீர்த்தேக்கத்துடன் அண்மித்தாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நீர் மின் நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுவதுடன் பொல்கொல்ல, விக்டோரியா மற்றும் கொத்மலை ஆகிய நீர்த்தேங்கங்களின் அணைக்கட்டு மீதான மின் விளக்குகளுக்காகவும் அதிகாரசபையால் இலங்கை மின்சார சபைக்கு மின்சாரக் கட்டணத்தை செலுத்துவது அவதானிக்கப்பட்டது. நீர்த்தேக்கப் பராமரிப்பு மற்றும் மின்சார சபை பயன்படுத்திய நீருக்கான கட்டணமொன்று செலுத்தப்படாமையினால், இப் பிரதான அணைக்கட்டுக்களில் மின்சாரத் தேவையினை இலவசமாக பெற்றுக் கொள்வதற்கு அதிகாரசபையினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொல்கொல்ல, கொத்மலை, போவதென்ன, மாபாகட, மாதுறுஓயா மற்றும் விக்டோரியா நீர்த்தேக்கத்தை அண்மித்த பாதுகாக்கப்பட்ட நிலப் பிரதேசத்தில் அனுமதியற்ற 655 குடியிருப்பாளர்கள் வாழ்ந்து வருகின்றமை வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், இந்த அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கும் மீண்டும் குடியேறும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களின் வருகையைத் தடுப்பதற்கும் அதிகாரசபை தவறியிருந்தது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம் | சொத்துக்களின் நிலைத்திரு தன்மையை உறுதிப்படுத்துவதற்காக வருடாந்தம் சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டு உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை, விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டிற்குரிய சொத்துக்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) | கட்டிடங்களின் பயன்பாடு | வெளித்தரப்பினரால் அதிகாரசபைக்குரிய கட்டிடங்கள் வாடகையின்றி பயன்பாட்டிற்கு எடுத்தல் வலயங்களில் கட்டிடங்கள் விளைவற்றுக் காணப்பட்டமை மற்றும் கணிய வளங்களுடன் கூடிய காணி முறையாக முகாமை செய்யப்பட்டு வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (இ) | வருமானம் மற்றும் செலவின முகாமைத்துவம் | வரி வருமானம் மற்றும் நிலுவை வரி வருமான சேகரிப்பிற்காக சரியான முறையொன்று காணப்படாமை மற்றும் வரி வருமான சேகரிப்பிற்குரிய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் செயற்படுத்தப்படாமை, நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பெறப்பட்ட முற்பணம் தீர்க்கப்படாமை. |
| (ஈ) | ஒப்பந்த நிர்வாகம் | திணைக்கள பெறுகை குழுவிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒப்பந்தங்களுக்காக பிரதேச பெறுகைகுழுவின் மூலம் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் எவ்வித அடிப்படையொன்று இல்லாமல் உரிய ஒப்பந்த செயற்பாடுகளை பகுதிகளாக்கி கேள்வி கோரியிருந்தமை. |
| (உ) | செயற்திட்ட முகாமைத்துவம் | செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு முன்னர் சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை மற்றும் ஏனைய உரிய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமை. |
| (ஊ) | வாகனக் கட்டுப்பாடு | வெளித்தரப்பினருக்குச் சொந்தமான வாகனங்களை மீளப்பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை மற்றும் வாகனங்கள் தொடர்பாக வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாமை. |